## ஈரான்

# புதிய திட்டம் – அமெரிக்கா எச்சரிக்கை

யுரேனியம் செறிவூட்டுவதற்காக இரண்டு உலைகளை அமைக்க ஈரான் திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்கா கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளது. யுரேனியம் செறிவூட்டுவதற்காக இரண்டு உலைகளை அமைக்க திட்டமிட்டுள்ள ஈரான், வான் வழி தாக்குதலைத் தவிர்க்கும் பொருட்டு அவை இரண்டையும் மலைக்குள்ளே அமைக்கப் போவதாக அறிவித்துள்ளது. யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை ஈரான் கைவிட வேண்டும் என்றும், ஈரானை தொடர்ந்து கண்காணித்து வருவதாக அமெரிக்க உயர் அதிகாரி டேவிட் பெட்ராஸ் சமீபத்தில் எச்சரித்திருந்தார்.

ஈரான் தொடர்ந்து இந்த முயற்சியில் ஈடுபட்டால் அதை அமெரிக்கா தகர்க்கும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் ஈரானின் அணுவிசை பிரிவின் தலைவர் அலி அக்பர் சலேஹ் இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளார். கடவுள் கிருபையால் மார்ச் மாதத்தில் ஈரானிய ஆண்டு தொடங்குகிறது. அப்போது இத்திட்டத்தைத் தொடங்குமாறு அதிபர் குறிப்பிட்டுள்ளார். எனவே அடுத்தமாதம் யுரேனியம் செறிவூட்டும் உலை அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்று அவர் கூறினார்.

ஏற்கெனவே நதான்ஸில் உள்ள யுரேனியம் செறிவூட்டும் ஆலையின் திறனை ஒத்ததாகவே புதிய ஆலைகளும் அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். யுரேனியத்தை செறிவூட்டக்கூடாது என ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து 3 முறை பொருளாதார தடை விதித்த போதிலும் அதை பொருட்படுத்தாது செயல்படுத்தி வருகிறது ஈரான்.

இந்நிலையில், அணு ஆயுதத்தை தாங்கிச் செல்லும் ஏவுகணை தயாரிப்பிலும் ஈரான் ஈடுபட்டுள்ளதாக ஐ.நா. அமைப்பான சர்வதேச அணுசக்தி கழகம் கவலை தெரிவித்துள்ளது. இதையடுத்து, ஈரான் கடுமையான பின்விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும் என்று அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் எச்சரித்துள்ளார். சர்வதேச கடமைகளை ஈரான் நிறைவேற்ற தவறி விட்டது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

ஆனால், ஈரான் அணு ஆயுதத்தில் நம்பிக்கை கொண்ட நாடல்ல் அது அப்படியான ஆயுதத்தை தயாரிக்காது என்று ஈரானின் அதியுயர் மதத் தலைவரான ஆயதுல்லா அலி கொமெனி தெரிவித்துள்ளார். ஈரானின் உள்நாட்டில்



தயாரிக்கப்பட்ட முதலாவது நாசகாரி கப்பலின் வெள்ளோட்ட வைபவத்தில் உரையாற்றிய அவர், சில மேற்குலக அதி காரிகள் காலாவதியான, அர்த்தமற்ற கருத்தை திரும்பத் திரும்பக் கூறிவருவதாகவும் குறை கூறினார்.

இதுஇவ்வாறிருக்க, ஈரான் நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அந்த நாட்டுக்கு ரஷியா எஸ்-300 ரக ஏவுகணைகளை வழங்க இருக்கிறது. இந்தத் தகவலை ரஷ்ய வெளிவிவகாரத்துணை அமைச்சர் செர்ஜி ரியாபாக்கோவ் உறுதிப்படுத்தினார். இந்த ரக ஏவுகணைகள், ஈரான் வானவெளிக்குள் வரும் எதிரி நாட்டு ஏவுகணைகளையும், விமானங்களையும் சுட்டு வீழ்த்தும். ஏவுகணைகளை ஈரானுக்கு வழங்கும் இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்யும்படி அமெரிக்காவும், இஸ்ரேலும் ரஷ்யாவை அடிக்கடி கேட்டுக்கொண்டு வருகின்றன. இதற்கு ரஷ்யா செவிசாய்க்க மறுத்து விட்டது. இந்த ஏவுகணைகளை வழங்கும் ஒப்பந்தத்தை செயல்படுத்துவோம் என்று அவர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தை அரசியலாக்குவதை கைவிடுமாறும் அவர் அமெரிக்காவை கேட்டுக்கொண்டார்.

## கைய்ட்டி

# பலியானவர்கள் எண்ணிக்கை 3 இலட்சமாக உயர்ந்தது

கைய்ட்டி தீவில் கடந்த மாதம் இடம்பெற்ற நில நடுக்கத் தில் பலியானவர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சமாக உயர்ந்துள்ளது. 2 இலட்சம் பேர் பலியானதாக அன்றைய நிலவரப்படி அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வெளியான போது மீட்பு பணிகள் நிறைவு அடையாமல் இருந்தது. மீட்பு பணிகள் இப்போது தான் ஓரளவிற்கு முழுமையாக நிறை வுக்கு வருகின்றன. கட்டடங்களின் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கி இறந்தவர்களின் உடல்களை அகற்றும் பணி சமீபத் தில் தான் முடிவு அடைந்தது. காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்தவர்களில் சிலர் சிகிச்சை பலன் அளிக்காமல் உயிரிழந்தார்கள். இவ்வாறு மீட்கப்பட்ட உல்களையும் மருத் துவமனைகளில் இறந்தவர்களின் விபரங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தபோது சாவு எண்ணிக்கை அதிகரித் துள்ளது. இந்த பூகம்பத்துக்கு 3 இலட்சம் பேர் பலியானதாக அந்த நாட்டின் அதிபர் ரெனே பெர்வால் தற்போது தெரி வித்துள்ளார்.

## ஆப்கானிஸ்தான்

# அமெரிக்கப்படையின் தாக்குதலில் 33 பொது மக்கள் பலி

ஆப்கானிஸ்தானின் தெற்கு பகுதியில் தலிபான் தீவிரவாதி கள் என நினைத்து சில வாகனங்கள் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் பொது மக்கள் 33 பேர் பலியானார்கள். ஆப்கானிஸ்தானின் தெற்கு பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் வலுவான நிலையில் இருக்கிறார்கள். அவர்களை ஒடுக்குவதற்காக மர்ஜா என்ற பகுதியில் இராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கிடை யில் டாய்கண்டி மாநிலத்தில் குஜ்ரான் மாவட்டத்தில் மூன்று பேருந்துகள் வேகமாக விரைந்தன. இந்த வாகனங்களில் தீவிரவாதிகள் தான் பயணம் செய்கிறார்கள் என நினைத்த அமெரிக்க இராணுவம், அவர்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தியது. இராணுவ உலங்குவானூர்திகள் சென்று தாக்குதல் நடத்தின. இதில் அந்த வாகனங்களில் இருந்தவர் கள் பலரும் கொல்லப்பட்டனர்.



இந்த தாக்குதலில் எத்தனை பேர் பலியானார்கள் என்ற விவரங்களை அமெரிக்க இராணுவம் வெளியிடவில்லை. இந்த தாக்குதல் பற்றி ஆப்கானிஸ்தான் அரசு விசாரணை நடத்தியது. அப்போது இந்த வாகனங்களில் பயணம் செய்தவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்பது தெரியவந்தது. 12 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் காந்தகார் நகருக்கு பயணம் செய்த போது இந்த தாக்குதல் நடந்தது. பலியானவர் களில் 4 பேர் பெண்கள். ஒரு குழந்தையும் பலியானது. இந்த தகவல்களை உள்துறை அமைச்சரக செய்தி தொடர்பாளர் செமிரி பாஷாரி தெரிவித்தார்.

மலைப்பாங்கான பிரதேசத்தின் பிரதான சாலையில் இந்த தனியார் மினி பேருந்துகள் சென்றது. இந்த பஸ்களில் மொத்தம் 42 பேர் பயணம் செய்தனர். அப்பாவிகள் பலியா னதற்கு அமெரிக்க தலைமையிலான இராணுவத்தின் தளபதி ஜெனரல் ஸ்டான்லி மெக்கிரைஸ்டல், ஆப்கானிஸ்தான் அதிபர் கர்வியிடம் மன்னிப்பு கேட்டார். அவர் வெளியிட்டு உள்ள அறிக் கையில், ஆப்கானிஸ்தான் மக்களை காப்பாற்றுவதற்காக தான் நாம் இங்கே வந்து இருக்கிறோம் என்று நான் படையினருக்கு கூறி இருக்கிறேன். தவறுதலாக அவர்கள் பலியானாலோ அல்லது காயம் அடைந்தாலோ அது நம் மீது உள்ள நம்பிக் கையை தகர்த்து விடும் என்று கூறி இருக்கிறேன். இருந்தும் இப்போது தவறு நடந்து விட்டது. இதற்காக நான் வருத்தம் தெரிவித்து கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் ஸ்டான்லி கூறி இருக்கிறார்.

## பாகிஸ்தான்

# தடையை மீறி பட்டம் விற்பனை, 1000 பேர் கைது

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம், லாகூர் உள்ளிட்ட இடங்களில், தடையை மீறி பட்டம் பறக்கவிட்டது மற்றும் விற்பனை செய்தது தொடர்பாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை காவல்துறையினர் கைது செய்தனர். பாகிஸ்தானில் பாரம்பரிய பசந்த் திருவிழாவை வண்ணமயமான பட்டங்களை பறக்கவிட்டு மக்கள் கொண்டாடுவது வழக்கம். சமீபகாலமாக இதுபோன்ற திருவிழாவின் போது பட்டங்களில், மாஞ்சா உள்ளிட்ட அபாய கரமான கலவையைப் பயன்படுத்துவதால் கழுத்து அறுபட்டு பலர் உயிரிழந்த, படுகாயமடைந்த சம்பவங்கள் ஏற்பட்டன.

இதனால் கடந்த 3 ஆண்டுகளாக பட்டம் பறக்கவிடுவ தற்கு அரசு தடை விதித்தது. இந்தாண்டு வரும் மார்ச் 6 மற்றும் 7ம் திகதிகளில் இத்திருவிழா கொண்டாடப்படும் என்று சில அமைப்புகள் அறிவித்துள்ளன. மேலும் லாகூர் உள்ளிட்ட பஞ்சாப் மாகாணப் பகுதிகளில் சட்டத்தை மீறி பட்டங்கள் பறக்கவிடப்படும் என லாகூர் பட்டம் பறக்கவிடுவோர் சங்கத்தினர் அறிவித்தனர். இதனால் ஏராளமான பட்டங்கள் விற்பனைக்கு தயாராயின. இதையடுத்து காவல்துறையினர் பட்டம் பறக்கவிட்டவர்கள் மற்றும் விற்பனை செய்தவர்கள் என சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை கைது செய்தனர். லாகூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டங்கள் மற்றும் 10 ஆயிரம் பட்டம் பறக்கவிடும் நூல் பந்துகளை பறிமுதல் செய்தனர்.

## பிரான்ஸ்

# பர்தாவை தொடர்ந்து `ஹலால்` உணவுக்கும் எதிர்ப்பு!




பிரான்சில் முஸ்லிம் பெண்கள் பர்தா அணி வதற்கு தடை விதிக்கும் சட்ட மசோதா நாடாளுமன் றத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ள நிலையில், தற் போது `ஹலால்` உணவ கங்களுக்கும் தடை விதிப் பது குறித்து விவாதங்கள் எழுந்துள்ளன.

பிரான்ஸ் நாட்டில் முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடும் அங்கியான ஹ்ஜாப் மற்றும் பர்தா போன்றவற்றை அணிவ தற்கு தடை விதிக்கப்பட்ட விவகாரம் பலவிதமான விவாதங் களை எழுப்பியுள்ளது. இதற்கு முஸ்லீம் மக்களிடம் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந் நிலையில், இஸ்லாமிய பாரம்பரிய உணவுகளை விற்பனை செய்யும் பிரபல குவிக் செயின் உணவகம்? ஒன்று தங்களின் உணவகங்களில் `ஹலால்` அசைவ உணவுகளை மட்டுமே விற்று வருவதை பிரச்சனையாக்கியுள்ளது ஒரு பிரான்ஸ் கட்சி. வரும் மார்ச் மாதம் பிரான்ஸ் நாட்டில் மாகாணத் தேர் தல்கள் நடைபெற உள்ள நிலையில், பிரான்ஸ் தீவிர வலதுசாரிக் கட்சி தலைவரான ஜோன்-மரி லுபென் இந்த விவகாரத்தை கையில் எடுத்துள்ளார்.

ஹலால் உணவை மட்டுமே விற்போம் என்று உணவகங் கள் தங்களுக்கு மதச் சாயம் பூசிக் கொள்வது ஜனநாயக சமூகத்துக்கு விரோதமானது என்றும், இந்த உணவகங்களில் வாடிக்கையாளர்களிடமும் இஸ்லாமிய வரி வசூலிக்கப்படுவ தாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரான்சில் உள்ள 250ற்கும் மேற்பட்ட குவிக் உணவகங்களில் முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் உள்ள சுமார் 3ற்கும் மேற்பட்ட உணவகங்கள் முஸ்லீம் மக்களுக்கான ‘ஹலால்’ உணவுகளை தயாரித்து வழங்குகின்றன.

இதேவேளை, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க்கைத் தொடர்ந்து பிரித்தானியாவும் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதற்கு தடை விதிக்கும் சட்டம் குறித்து ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.